## சுருக்கம்

பொதுப்பணித்துறை – கட்டடம் – மதுரை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்-IIன் கட்டுப்பாட்டில் உள்ள தேனி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழ் இயங்கும் தேனி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம் எண் 3–ஐ, சேலம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விழுப்புரம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்திற்கு, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், விழுப்புரம் எண் 2 ஆக பணிப்பெயர்ச்சி (Redeployment) அடிப்படையில் மாற்றம் செய்தும் ஏற்கனவே விழுப்புரம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விழுப்புரம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டத்தை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், விழுப்புரம் –1 என பெயர் மாற்றம் செய்தும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ஜி1)த்துறை

அரசாணை (நிலை) எண் 94 | நாள் 23.3.2010
பங்குனி 9
திருவள்ளுவர் ஆண்டு 2041

தலைமைப் பொறியாளர், (கட்டடம்), பொதுப்பணித் துறை, சென்னை–5,
கடித எண் உசெபொ/தொ.நு.பி 10 (ஆ) /36065/2009 நாள் 9.11.2009

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் சேலம், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விழுப்புரம், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழ் நான்கு உபகோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் இக்கோட்டத்திற்கு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி கட்டடம் கட்டுவதற்காக ரூ.98.75 கோடிக்கு (முதல் கட்டம் ரூ.40.05 கோடி, இரண்டாவது கட்டம்.ரூ.58.70 கோடி) நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், இக்கோட்டத்தின் நான்கு உபகோட்டங்களுக்கும் போதுமான வேலைப்பளு உள்ள நிலையில் கூடுதலாக இந்த மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கான பணிகளையும் விழுப்புரம், கட்டட கட்டுமான உபகோட்ட உதவி செயற்பொறியாளரால் தற்போது கவனிக்கப்பட்டு வருகின்றது என்றும், முதலாம் கட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் இதுவரை ரூ.23.62 கோடி மதிப்பிலான பணிகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், முதல் கட்டத்தில் எஞ்சியுள்ள பணிகள் மற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் என இன்னமும் செய்யப்பட வேண்டிய பணிகளின் மதிப்பு ரூ.75.13 கோடியாகும் என்றும், மேற்படி பணிகள் அனைத்தும் ஒப்பந்த காலத்திற்குள் அதாவது டிசம்பர் 2010–க்குள் முழுமையாக முடிக்க வேண்டியுள்ளதால் மேற்படி பணியில் தனிக்கவனம் செலுத்தி பணிகளை விரைந்து முடிக்க ஏதுவாக கூடுதலாக ஒரு உபகோட்டம் விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட வேண்டியது அவசியமாகின்றது என்றும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம் எண்.2, மதுரை தனது கட்டுப்பாட்டில் உள்ள தேனி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழுள்ள கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம் எண்.3 தேனியில் தற்போது வேளைப்பளு

குறைவாக உள்ள காரணத்தினால் இந்த உபகோட்டத்தினை பணியாளர்களுடன் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் சேலம் கட்டட(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டத்தின் கீழ் உள்ள விழுப்புரம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்திற்கு மாற்றம் செய்ய இசைவினை அளித்துள்ளார் என்றும் இதனால் அரசிற்கு செலவினங்கள் ஏதும் ஏற்படாது என்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) தெரிவித்துள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கருத்துருவினை ஏற்று, பணி மாறுதல் பயணப்படி (Transfer Traveling Allowance) தவிர மற்ற கூடுதல் செலவினங்கள் எதுவும் ஏற்படுத்தக்கூடாது மற்றும் பணிப்பெயர்ச்சி அடிப்படையில் மாறுதல் செய்யப்பட்ட பணியாளர்கள் தவிர கூடுதல் பணியாளர்களை உருவாக்கக்கூடாது என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலும் மதுரை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.II ன் கட்டுப்பாட்டில் உள்ள தேனி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம் எண் 3–ஐ சேலம், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விழுப்புரம், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்திற்கு, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், விழுப்புரம் எண்.2 ஆக பணிப்பெயர்ச்சி அடிப்படையில் பிற்சேர்க்கையில் கண்டுள்ளவாறு மாற்றம் செய்தும், ஏற்கனவே விழுப்புரம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள விழுப்புரம், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டத்தை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், விழுப்புரம் எண்–1 என பெயர் மாற்றம் செய்தும் அரசு ஆணையிடுகிறது.

3,. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 14943/PW I/2010 நாள் 18.3.2010 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, சென்னை–5
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை
கருவூல அலுவலர், தேனி/விழுப்புரம்/ சேலம்.
<u>நகல்:–</u>
நிதி (பொ.ப. I)த் துறை, சென்னை–9
இருப்பு கோப்பு /உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

<u>அரசாணை (நிலை) எண் 94 , பொதுப்பணி (ஜி1)த்துறை, நாள் 23.3.2010 –ன் பிற்சேர்க்கை</u>

மதுரை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்-IIன் கட்டுப்பாட்டில் உள்ள தேனி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்தின் கீழ் இயங்கும் தேனி கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம் எண் 3–ஐ, சேலம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விழுப்புரம் கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டத்திற்கு, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம், விழுப்புரம் எண் 2 ஆக பணிப்பெயர்ச்சி (Redeployment) அடிப்படையில் என மாற்றம் செய்யப்படும் பணியிடங்களின் விவரங்கள்:–

| வரிசை எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவி செயற் பொறியாளர் | 1 |
| 2. | உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் | 2 |
| 3. | உதவியாளர் | 2 |
| 4. | அலுவலக உதவியாளர் | 2 |
| | மொத்தம் | 7 |

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்